D.No: 2425/26
Dt: 23/11/26

திண்டுக்கல் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, திண்டுக்கல்
ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம்,
திண்டுக்கல்.

சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டர்களாக பணியாற்ற விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

திண்டுக்கல், பழனி, வேடசந்தூர், ஒட்டன்சத்திரம், நத்தம், கொடைக்கானல், ஆத்தூர் மற்றும் குஜிலியம்பாறை ஆகிய ஊர்களில் இயங்கும் மாவட்ட / வட்ட சட்டப்பணிகள் குழுவிற்கு சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டர்களாக பணியாற்ற கீழே குறிப்பிடப்பட்ட நபர்கள் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் மேலே குறிப்பிட்ட ஊரைச் சார்ந்தவராக இருக்கவேண்டும்.

a) ஆசிரியர்கள் (ஓய்வு பெற்றவர்கள்)
b) ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள் மற்றும் மூத்த குடிமக்கள்
c) சமூகப் பணியில் முதுநிலைக்கல்வி பயிலும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள்
d) அங்கன்வாடி பணியாளர்கள்
e) மருத்துவர்கள் / உடல் நல நிபுணர்கள்
f) மாணவர்கள் மற்றும் சட்டக்கல்லூரி மாணவர்கள் (அவர்கள் வழக்கறிஞராக பதிவு செய்யும் வரை)
g) அரசியல் சார்பற்ற அரசு சாரா சமூக சேவை நிறுவனங்கள் மற்றும் சங்கப் பிரமுகர்கள்
h) மகளிர் குழுக்கள், மைத்ரி சங்கங்கள் மற்றும் வறியோரை உள்ளடக்கிய சுய உதவிக்குழுக்கள் ஆகியவற்றில் உறுப்பினர்கள்
i) நீண்ட கால தண்டனை பெற்று சிறையிலுள்ள படித்த சிறைவாசிகள்
j) மாவட்ட / வட்ட சட்டப்பணிகள் தன்னார்வ சட்டப்பணியாளர்கள் பணிக்கு பொருத்தமாக கருதும் நபர்கள்

1.	கல்வித் தகுதி	பள்ளி இறுதி வகுப்பில் (10ம் வகுப்பு) தேர்ச்சி பெற்றவராகவும், விரிவாகப் புரிந்துணரும் திறன் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

2.	இதர தகுதிகள்	சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டர்கள், இரக்கம், ஏனையவரின் உணர்வுகளை புரிந்து கொள்ளும் தன்மை, கலப்படமற்ற தூய்மை ஆகிய அடிப்படை மனித குணங்களின் மீது ஒன்றி இருத்தல், எவ்வித பணப்பயனும் எதிர்பார்க்காமல் தன்னார்வ சேவை புரிதல், தங்கள் பணிகளில் இருந்து வருமானத்தை எதிர் நோக்காதவர்களாகவும், ஆனால் இச்சமுகத்தின் பலவீனமான பிரிவினர், வறியவர்கள் ஆகியோரை மேலுயர்த்துவதற்கான உறுதியும், உணரும் திறனும் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.
3.	வயது	18 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.
4.	மதிப்பூதியம்	பணிபுரியும் நாட்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.750/- மதிப்பூதியமாக வழங்கப்படும்.
5.	விண்ணப்பிக்க கடைசி நாள்	09.12.2026 மாலை 5.30 மணி
6.	பணிக்காலம்	தேர்வு செய்யப்படும் நாளிலிருந்து ஒரு ஆண்டு
7.	காலி பணியிடங்களின் எண்ணிக்கை	திண்டுக்கல் – 10 நபர்கள் பழனி – 3 நபர்கள் வேடசந்தூர் – 3 நபர்கள் ஒட்டன்சத்திரம் – 2 நபர்கள் நத்தம் – 3 நபர்கள் ஆத்தூர் – 3 நபர்கள் கொடைக்கானல் – 3 நபர்கள் குஜிலியம்பாறை - 3 நபர்கள்

விருப்பம் உள்ளவர்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்படிவத்தை மட்டுமே பதிவிறக்கம் செய்து, அவ்விண்ணப்படிவத்தினை தெளிவாக பூர்த்தி செய்து, உரிய ஆவணங்களின் நகல்களுடன் தபாலிலோ அல்லது நேரிலோ கீழே கண்ட முகவரிக்கு 09.12.2026 தேதி மாலை 5.30 மணிக்குள்ளோ அல்லது அதற்கு முன்பாகவோ மேற்படி

அலுவலகத்திற்கு அலுவலக வேலை நாட்களில் கிடைக்கப்பெறுமாறு அனுப்பக் கோரப்படுகிறது.

உயர்திரு. தலைவர் அவர்கள்,
மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,
மாற்று சமரச தீர்வு மையம்,
ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் எதிரில்,
திண்டுக்கல் 624 004.

மேலும், விண்ணப்பதார்கள் நேர்காணல் குறித்த தேதி https://dindigul.dcourts.gov.in/ இணையதளம் மூலமாக பின்னர் அறிவிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

குறிப்பு : சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டர்கள் பணி நிரந்தர பணி அல்ல. பணி நிரந்தரம் செய்ய உரிமை கோரமுடியாது.

தலைவர் / முதன்மை மாவட்ட நீதிபதி,
மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,
திண்டுக்கல்.

23/11/26

PHOTO

திண்டுக்கல் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு.
சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டர்கள் சேர்க்கை விண்ணப்ப படிவம்

1.	பெயர் (பெரிய எழுத்துக்களில்) Name (In Capital Letters)	
2.	பாலினம் / Sex	
3.	வயது / Age	
4.	தகப்பனார் / கணவர் பெயர் (Father's / Husband's Name	
5.	கல்வித் தகுதிகள் / Educational Qualifications	
6.	தொழில் சார்ந்த கல்வித் தகுதிகள் Technical Qualifications	
7.	ஜாதி மற்றும் பிரிவு / Community / Caste	
8.	மதம் / Religion	
9.	அலுவலக விலாசம் / Office Address	
10.	வசிப்பிட விலாசம் / Residential Address	
11.	தொழில் / Occupation	
12.	தொலைபேசி எண் / Telephone Number	
13.	கைபேசி எண் / Mobile Number	
14.	மின்னஞ்சல் முகவரி / E-mail Address	
15.	எப்பகுதியில் சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டராக பணி செய்ய விரும்புகிறீர்கள் Place in which willing to work as Para Legal Volunteers √ மார்க் செய்யவும் - Tick in the Appropriate Column	திண்டுக்கல் பழனி வேடசந்தூர் ஒட்டன்சத்திரம் நத்தம் ஆத்தூர் கொடைக்கானல் குஜிலியம்பாறை

16.	தாங்கள் ஏற்கனவே சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டராக பணிபுரிந்திருந்தால் விவரம் மற்றும் செய்த பணிகள் குறித்து தெரிவிக்கவும். Whether you have already worked as PLV? If so, details of Service rendered to be stated	
17.	குற்ற வழக்கு, சொத்து சம்மந்தப்பட்ட மற்றும் பிற நீதிமன்ற வழக்குகள் விண்ணப்பதாரருக்கு நிலுவையில் இருப்பின் அல்லது முடிவுற்றிருப்பின் அது பற்றிய முழு விபரம்	
18.	மேலும் தாங்கள் தெரிவிக்கும் தகவல்கள் / Other Information if any.	
19.	மேற்கண்ட தகவல்களுக்கான ஆவணங்களின் நகல் இணைக்கப்பட்டுள்ளதா?	

நாள் / Date :
இடம் / Place: திண்டுக்கல்

கையெழுத்து / Signature

குறிப்பு: சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டர்கள் பணி நிரந்தர பணி அல்ல. பணி நிரந்தரம் செய்ய உரிமை கோர முடியாது.